நாள்.08.10.2025
அசல் வழக்கு எண்.121/2023
வா. சா. 1
பெயர். சவரிமுத்து செல்லத்துரை
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

வழக்கு சொத்தின் சர்வே எண் 970/20 ஆகும். மேற்படி சர்வே எண்ணில் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சரியாக தெரியவில்லை. ஆதியில் வழக்கு சொத்து சவரிமுத்து பணிக்கருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சவரிமுத்து பணிக்கர் என் தந்தையின் தந்தை என்றால் சரிதான். சவரிமுத்து பணிக்கருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 11 குழந்தைகள். 5 ஆண்கள் மற்றும் 6 பெண்கள். மேற்படி 11 நபர்களுக்கும் சவரிமுத்து பணிக்கரின் சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 11 நபர்களுக்கும் சொத்து எவ்வாறு பிரிக்கப்பட வேண்டுமென ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை யாக்கோப்புக்கு என்ன சொத்து பாத்தியமோ அதே போல் மற்ற 10 நபர்களுக்கும் சொத்து பாத்தியப்படும் என்றால் சரிதான்.

சவரிமுத்து பணிக்கரின் வாரிசுகள் 11 பேரும் உயிருடன் இருக்கிறார்களா என்றால் 2 நபர்கள் தான் உயிருடன் இருக்கிறார்கள். காலம் சென்ற 9 நபர்களின் வாரிசுகள் உயிருடன் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை யாக்கோப்புக்கு 4 வாரிசுகள். சவரிமுத்து செல்லத்துரை, ஞானசுந்தரம், எஸ்தர், வசந்தா ஆவார்கள். என் அம்மா பெயர் சாமிகண்ணு அவர் தற்போது உயிருடன் இல்லை. என் தந்தை யாக்கோப்பு தபசில் சொத்துக்களை நானும் என்னுடன் பிறந்தவர்களும் எவ்வாறு பிரிக்க வேண்டுமென ஆவணம் எதுவும் பிறப்பித்து வைத்துள்ளாரா என்றால் இல்லை.

வழக்கு தபசில் சொத்தை பொறுத்து எனக்கு உள்ள உரிமை என் உடன் பிறந்தவர்களுக்கும் உள்ளது என்றால் சரிதான். அதனால் வழக்கு சொத்து எனக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என பரிகாரம் கோர இயலாது என்றாலும் என் சகோதர சகோதரிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது வீடு வடக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் கூரை வடக்கு நோக்கி சாய்ந்தவாறு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் மேல் விழும் மழை நீர் வடக்கு நோக்கி விழும் அமைப்பில் உள்ளது என்றால் சரிதான்.

என்னுடைய சகோதர சகோதரிகள் வழக்கில் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தொட்டடுத்த மேல்புறம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டு வடபக்க காம்பவுண்ட் சுவர் எனது வீட்டை ஒட்டி தான் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் வடபக்க காம்பவுண்ட் சுவர் பழைய சுவர் என்றால் கட்டி 40 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றாலும் சரியல்ல. எனது வீட்டின் மேல்பக்க சுவரில் ஜன்னல் வெண்டுலேசன் போன்ற அமைப்பு இல்லை என்றால் சரியல்ல ஜன்னல் உள்ளது. மேற்படி ஜன்னலின் கதவு எனது வீட்டின் உள்பக்கமாக திறக்கும்படியாக உள்ளது என்றால் சரிதான்.

எனது வீட்டின் மேல்பக்கம் எனக்கு இடமில்லாததால் தான் ஜன்னல் உள்பக்கமாக திறக்குமாறு அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல, என்னுடைய வீடு 1935 ல் கட்டப்பட்டது. அந்த காலத்தில் அமைக்கப்பட்ட ஜன்னல் அது. எனது தாத்தா சவரிமுத்து பணிக்கர் வீடாக தான் கிரையம் பெற்றார் என்றால் நான் பிறப்பதற்கு முன்பு வீடு கட்டப்பட்டது. என்னுடைய பிராதில் வீடு நான் கட்டினேன் என்றும் வீட்டிற்கு மேல்பக்கம் கிழமேலாக 3 அடி இடம் சுவரை பராமரிப்பதற்காக வைத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றாலும் வீடு நான் தான் கட்டினேன் என பிராதில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றாலும் சரியல்ல.

வழக்கு சொத்தின் மேல்பக்கம் சர்வே எண் 970/18 என்பது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து நீதிமன்ற ஆணையர் முன்பு அளக்கப்பட்டது என்றால் சரிதான் ஆனால் சரியாக அளக்கப்படவில்லை. மேற்படி ஆணையர் அறிக்கைக்கு எதிராக ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. சர்வே எண் 970/20 வடதலையில் கிழமேல் அளவு 5 மீட்டர் என்றால் எனக்கு தெரியாது. வடதலை கிழமேல் அளவு 5 மீட்டர் என்பது எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

மேற்படி 5 மீட்டர் எனது சுவருடன் முடிந்துவிடுகிறது என்றாலும் அதற்கு மேல் எனக்கு இடம் கிடையாது என்றாலும் சரியல்ல. தபசில் 2 மற்றும் 3 சொத்துக்கள் சர்வே எண் 970/18 பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி 970/18 ல் தான் பிரதிவாதி வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு முன் விழும் மழைநீரும் வடக்கு ரோட்டில் தான் செல்கிறது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேல்பக்கம் இடம் இல்லாததால் தான் வடக்கு ரோட்டில் கழிவுநீர் செல்கிறது என்றால் சரியல்ல.

நான் எந்த ஆண்டில் மும்பையில் இருந்தேன் என்றால் 1975 ஆண்டு ஆகும். 1975 ம் ஆண்டிற்கு பிறகு நான் மும்பை செல்லவில்லை ஊரில் தான் சுற்றி வருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி அவருடைய

வீடு கட்டுவதற்கு பூமி பூஜை செய்தது தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி வீடு கட்டும் பொழுது நான் ஆட்சேபனை எதுவும் செய்தேனா என்றால் செய்யவில்லை. பிரதிவாதி அவருடைய இடத்தில் வீடு கட்டியதால் தான் நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சரியாக அளந்து கட்டுமாறு அறிவுறுத்தினேன். பிரதிவாதி என்னுடைய இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து சுவர் கட்டியதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

நான் 2023 ம் ஆண்டு மும்பையில் இருந்து திரும்பி வந்தபோது பிரதிவாதியின் சுவர் கட்டிய விவரம் எனக்கு தெரியும் என்றாலும் பிராதில் கூறியுள்ளேன் என்றாலும் சரிதான். வழக்கில் அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனக்கு பாத்தியப்படாத சர்வே 970/18 ல் நான் எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தைபார்வையிட்டு சரியாக அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.

வாதியின் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.